1973 நவம்பர் 26]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

6. மின்வாரியத்தின் 1973-74-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, கடைசியாக இன்றையதினம் நடைபெறுகின்ற இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் கள் பல கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள்; அதை ஒட்டி நானும் பல கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.